**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 01.07.2026**
**OS. No. 17/2022**
**வழக்கு சாட்சி DW.1– சித்தையன் , த/பெ. பழனியப்ப கவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதிகள் என் மீது நிலம் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நானும், 2ம் பிரதிவாதியும், எங்களது நிலத்தை 1ம் வாதியிடம் 20.02.2006 ல் அடமானம் வைத்து பணம் பெற்றிருந்தோம். பணத்தை திருப்பி கொடுத்தபோது அதை வாங்க மறுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டார்கள். எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட நிலத்தை அடகு வைத்தோம் என்றால் விஸ்தீரணம் குறிப்பிடவில்லை. மொத்தமாக ஒரு வயலை அடமானம் வைத்து விட்டோம். மேற்கண்ட அடகு வைத்த நிலமானது என் அண்ணன் மகன் 2ம் பிரதிவாதி மாதேஷ்க்கு பாத்தியப்பட்டதாகும். 1ம் வாதி பணத்தை பெற்றுக்கொள்ள மறுத்ததற்கு காவல் நிலையத்தில் புகாா கொடுத்தோமா என்றால் இல்லை, ஊரில் பஞ்சாயத்து வைத்து கேட்டோம். பஞ்சாயத்தை தங்கராஜ் மற்றும் நாராயணன் செய்து வைத்தார்கள், அவர்கள் தற்போது இறந்துவிட்டார்கள்.

2) அடமானம் வைத்தது தொடர்பாக அடமான கடன் பத்திரம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் ஏற்படுத்தப்பட்டது. அந்த அடமான கடன் பத்திரத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தோம் என்றால் இல்லை. 20.02.2006 ம் தேதியில் நாங்கள் 1ம் வாதியின் பெயரில் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஆவணம் எழுதி கொடுத்துள்ளோம் என்றால் சரிதான், அது தான் கடனுக்காக நாங்கள் எழுதி கொடுத்ததாகும். மேற்படி கிரைய பத்திரத்தின் பதிவு எண்.474/2006 என்றால் பதிவு எண் எனக்கு தெரியவில்லை. அந்த அடமான சொத்தானது யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எங்கள் கூட்டு குடும்ப சொத்தாகும்.

3) 2ம் பிரதிவாதி மாதேஷ் என்பவர் என் தந்தையின் இரண்டாவது மனைவிக்கு பிறந்த மகன் என்றால் சரியல்ல, என் அண்ணன் முத்துவின் மகன் ஆவார். மேற்படி முத்து என்பவர் என் சித்தப்பா மகன் ஆவார். மேற்கண்ட 20.02.2006ல் பதிவு செய்து கொடுத்ததாக சொல்லும் பத்திரத்தை நான் என் மகன்களான மைனர் கோவிந்தன் மற்றும் சக்திவேல் ஆகியோருக்கு பாதுகாவலராக இருந்து எழுதி கொடுத்துள்ளேன். அந்த 20.02.2006 பத்திரத்தில் இப்பவும் எங்களுக்கு பிதுர்ராஜ்ஜியமாகவும், வாய்மொழி பாத்தியமாகவும் பாத்தியப்பட்டு, எங்களது சொந்த சுவாதீன அனுபவத்திலிருந்து சொத்தை சர்வ சுதந்திரமாய் சுவாதீனமும், கிரையமும் செய்து கொடுத்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) நான் 2006ல் வாதிகளுக்கு தாவா சொத்தை விற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. 2021ல் என் மீது என்ன பிரச்சனை சம்மந்தமாக வாதிகள் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் அவ்வாறு எதுவும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 2022ல் என் மீது வாதிகள் வழக்கு தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. சுமார் 5, 6 வருடத்திற்கு முன்பு நான் பணம் கொடுத்து, நாங்கள் எழுதி வைத்த ஆவணத்தை ரத்து செய்யுமாறு கேட்டோம், அதை வாதிகள் வாங்க மறுத்துவிட்டார்கள். பொதுவாக ஒருவர் பெயரில் கிரையமாக சொத்து எழுதிகொடுக்கப்பட்டு, அதை ரத்து செய்யவேண்டும் என்றால் மூன்று வருடத்திற்குள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

5) நான் எழுதி கொடுத்தது கிரைய பத்திரம் என்றும், ஆனால் அடமான பத்திரம் எழுதி கொடுத்ததாகவும், அதை ரத்து செய்து சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்குமாறு கேட்டுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதியின் பெயரில் வழக்கு சொத்து சம்மந்தமாக கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த சொத்தில் 1ம் வாதி வீடு கட்டி குடியுள்ளார் என்றால் அந்த வீடு எங்களுடையது ஆகும், நாங்கள் வெளியூருக்கு கல் உடைக்க சென்றபோது தங்கிகொள்வதாக அனுமதி கேட்டு அனுமதியின் பேரில் தங்கியுள்ளார். வழக்கு

சொத்தலுள்ள வீட்டிற்கு எங்கள் பெயரில் மின் இணைப்பு வரி வகையறாக்கள் இருந்ததா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை, வாதிகள் குடிபெயர்ந்த உடன் அவர்கள் பெயருக்கு அனைத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

6) ஒருவர் பெயருக்கு கந்தாய ரசீது, வீட்டு வரி, மின் இணைப்பு கொடுக்கவேண்டும் என்றால் அவர்கள் பெயரில் சொத்தின் பத்திரம் இருக்கவேண்டும் என்றும், 2006 ல் 1ம் வாதி கிரையம் பெற்றவுடன், அவர்கள் பெயருக்கு கந்தாய ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றும், உண்மையில் அந்த வீடு நாங்கள் கட்டியிருந்தால் முதலில் எங்கள் பெயரில் தான் வரி வகையறாக்கள் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் வயலை தான் விற்றதாக சொல்லிவிட்டு, அதிலுள்ள வீடு என்னுடையது என்று பொய்யாக சொல்கிறேன் என்றும், வாதி தான் கிரையம் பெற்றவுடன் அந்த வீட்டை கட்டினார் என்றும், அதற்கு வரி வகையறாக்களும் தன் பெயரில் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

7) வரி வகையறாக்கள் 1ம் வாதி பெயரில் வழங்கப்பட்டது தொடர்பாக வட்டாட்சியரிடமோ, காவல் நிலையத்திலோ புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, பஞ்சாயத்து பேசினோம், அதற்குள் வழக்கு தாக்கல் செய்துவிட்டாகள். 1ம் வாதி பெயரில் பட்டா எண்.1574 கூட்டு பட்டாவாக வழங்கப்பட்டபோதும், வட்டாட்சியரிடம் ஆட்சேபனை தெரிவிக்கவில்லையா என்றால் பட்டா வழங்கியது எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 10.07.2026ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.